1970 ஏப்ரல் 4]

வழிபாடு உள்ளவர்கள்—ப்ராட்டஸ்டன்ட், கத்தோலிக்கர்—என்ற பிரிவு இருக்கிறது. உள்ளே வருகின்றவர்கள் ஆண்டவனைத் தொழுதுதான் தீரவேண்டுமென்று நாம் கட்டாயப்படுத்த முடியாது. நாங்கள் எல்லாம்கூட இந்துக்கள் கோயிலுக்குள் செல்கிறோம். அங்கே ஆண்டவனை வணங்கித்தான் தீரவேண்டு மென்பது இல்லை. அங்கிருக்கும் கலைப் பொருட்களைத் தெரிந்து கொள்கிறோம். நம்முடைய நாட்டில் பழங்காலச் சிற்பங்களையும் தமிழ்நாட்டினுடைய கலைச்செல்வங்களையும் தெரிந்துகொள்ள பயன்படுகிறது. தமிழ்நாட்டினுடைய கலைச் செல்வங்களையும், கலைச்சிறப்பையும் இந்துக்கள் அல்லாத மற்ற மதத்தினரும் அறிவதற்காக இது பயன்படும் என்று கருதுகிறோம். இன்னும் சொல்லப்போனால் இந்துக்கள் சுயநலம் உடையவர்கள் என்று மற்ற மதத்தினர் சொல்லக்கூடாத அளவிற்கு அவர்களையும் கோயிலுக்குள் செல்ல அனுமதிப்பது நல்லது என்றுதான் கருது கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

10–00 மு.ப.

(1) நடைமுறைக் கேள்வி—தொடர்ச்சி

தாமதமாகப் பேரவை கூடியது குறித்து

THIRU T. MARTIN : On a point of Order, Sir. The House was delayed by five minutes today before the starting of the business. Now I want to know from the Honourable Speaker the reason for such delay in the starting of business of the House and also I wanted to put a question regarling kitchen garden......

MR. SPEAKER : No point of order.

உங்கள் கையிலே கட்டியிருக்கிற கடிகாரம் தவருக இருக்கலாம். அவையில் இருக்கிற கடிகாரங்களில் ஐந்து நிமிஷம் தாமதம் ஆக வில்லை. இரண்டு நிமிஷங்கள் தான் மேலே ஆகியிருந்தது.

(3) ஒற்றி வைப்புத் தீர்மானம்

மதுரை மாவட்ட கரும்பு விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன் உண்ணுவிரதம் இருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்ததாக, திருமதி கே. பி. ஜானகியம்மாள் விதி 42-இன் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

" மதுரை மாவட்டக் கரும்பு விவசாயிகள் தங்களது கோரிக் கைகளைக் கேட்டு ஆலை நிர்வாகிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி யும் முடிவு பெருமல் 2—4—1970 தேதி முதல் மதுரை கலெக்டர் அலுவலகத்தின் முன் உண்ணுவிரதமிருந்து வருவது இந்தப் பகுதி யில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆகையால் இந்த

அவசரப் பொது முக்கியத்துவத்தை சபையில் விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இது அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட நிகழ்ச்சி என்ற காரணத்தினால் இதற்கு அனுமதிதர மறுக்கிறேன்.

(4) அமைச்சரின் விளக்க உரை

விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணக் குறைப்பு குறித்த முதலமைச்சரின் விளக்க உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விதி 82 இன் கீழ் இந்த அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, 1—1—1970-க்கு முன்பு விவசாயிகளுக்கு ஒரு யூனிட் மின்சாரம் 8.25 பைசாவுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழக அரசின் ஒப்புதலின் பேரில் ஒரு யூனிட் மின்சாரத்தின் கட்டணத்தை 10 பைசா என்று 1—1—1970 முதல் உயர்த்தியுள்ளதை இந்த மாமன்றம் அறியும். மின் உற்பத்தி செய்வதற்கும், அதை விவசாயிகள் பயன்படுத்தும் இடத்திற்குக் கொண்டு வருவதற்கும் அதிக செலவாகிறது. அதனால் ஒரு யூனிட் மின்சாரத்திற்கு மின்சார வாரியம் 16 பைசாவுக்குமேல் செலவிட வேண்டியிருக்கிறது. எல்லா பம்பு செட்டுகளுக்கும் யூனிட் ஒன்றுக்கு 8.25 பைசா என்று கட்டணம் வசூலித்தால் மின்சார வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 9 கோடி இழப்பு ஏற்படுகிறது. அந்த இழப்பில் ஒரு பகுதியையாவது சரிக்கட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் 8.25 பைசா என்று இருந்ததை 10 பைசா என்று உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 10 பைசா என்று உயர்த்தினால் கூட மின்சார வாரியத்திற்கு வரும் ரூ. 9 கோடி நட்டத்தை முழுவதுமாக ஈடு கட்ட முடியாது. ஆனால் ரூ. 9 கோடி நட்டம் என்பதை ரூ. 6 கோடி அல்லது 7 கோடி நட்டம் என்ற அளவிற்குக் கொண்டுவர இயலும்.

நிலை இப்படியிருந்தும் சேலம், கோவை, தென் ஆற்காடு மாவட்டங்களில் ஆழமான கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுக்க அதிகச் செலவாகிறதென்றும் அதற்குச் சலுகை அளிக்கவேண்டுமென்றும் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்கள் நேற்று என்னைச் சந்தித்து கருத்து அறிவித்தனர்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலைமையையும், விவசாயிகளுக்குச் சலுகை அளிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தையும் ஒரு சேர கருத்தில் கொண்டு அரசு ஏற்கனவே எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்தது. எந்த அளவிற்கு விவசாயிகளுக்குச் சலுகை அளிக்க முடியும் என்பதும் நன்கு பரிசீலிக்கப்பட்டது. 75 அடியும் அதற்கு மேலும் ஆழமுள்ள கிணறுகளிலிருந்து பம்பு செட்டுகளின்மூலம் தண்ணீர் எடுப்பதற்கு விவசாயிகளுக்குச்